1975 மார்ச் 11]

College of Karnatic Music in Thanjavur District

* 268 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the Tamil Nadu State Committee for the Bi-centenary of Vedanayagam has recently requested the Government for grants for opening a college of Karnatic Music at Thanjavur and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u>

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. என். இட்டப்பா</u> : தலைவர் அவர்களே, கவிஞர் வேதநாயகம் அவர்கள் மாயூரத்தைச் சேர்ந்தவர்கள். தமிழில் முதன் முதலில் வெளி வந்த மிகப் புகழ்வாய்ந்த "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நாவல் அவரால் இயற்றப்பட்டது. அத்தகைய சிறப்பான பாராட்டுக்குரிய வர் அவர். எனவே, அத்தகைய சிறந்த கவிஞருக்கு இந்த முறையில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு நமது அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, அது பற்றி செயற்குறிப்பு எதுவும் இல்லை. அப்படியொரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று யாரிடத்திலிருந்தும் விண்ணப்பம் வரவில்லை. அதற்காகக் குழுவினர் இருந்து, அந்தக் குழுவினர் சிலபல செயற் குறிப்புகளுடன் அரசை அணுகினால், அரசு அவற்றைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Power generator for Thanjavur Hospital

* 269 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether a generator was purchased for the purpose of meeting power cut or power failure at the R.M. Government Hospital, Thanjavur, if so, when; and

(*b*) whether the generator has been installed and has started working?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u>

(அ) ஆம். 1971 செப்டம்பரில் வாங்கப்பட்டது.

(இ) மின் சக்தி வழங்கப்பட வேண்டிய வெவ்வேறு இடங்களில் மின்சக்தி சுமை அதிகமானதன் காரணமாக, தானியங்கி மின்சக்தி ஏற்பாடு, புதைமின் கம்பிகள் போடுதல் போன்ற மாறுதல்களைச் செய்வது அவசிய மாயிற்று. இதற்கு கூடுதலாக ரூ. 45,000 செலவாகும் எனத் தெரி விக்கப்பட்டது. திருத்த மதிப்பீட்டுக்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கென முன்னரே கட்டி முடிக்கப் பட்டுள்ள புதிய கட்டிடத்தில் மின்சக்தி உற்பத்திப் பொறி நிறுவப்பட் டுள்ளது. வோல்டாஸ் நிறுவனத்தின் பணிப் பொறியாளர் இதனை ஓரிரு திங்களுக்குள் இயக்கி வைப்பார். ஏப்ரலில் இது பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் ச.மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத் துவ மனையில் உள்ளதுபோல், மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி களோடு இணைந்துள்ள மற்ற மருத்துவ மனைகளிலும் இம்மாதிரி வசதி செய்யப்பட்டிருக்கிறதா?. அப்படிச் செய்யப்படாவிட்டால், எதிர்காலத்தில் திடீரென்று ஏற்படும் நிலைமையைச் சமாளிக்க இத்தகைய நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஏற்படுத்தலாம் என்ற ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், செயல் முறையில் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இப்பொழுது நான் அறியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்ட கேள்விதான். தஞ்சையில் செய்தது மாதிரியாக எல்லா இடங் களிலும் இம்மாதிரி ஜெனரேட்டர் போட்டு ஏற்பாடு செய்யப்படுமா? அப் படியானால், இதுவரையில் எந்த எந்த ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி யில் இப்படி ஜெனரேட்டர்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏறத்தாழ அதே வகை கேள்விக்குத்தான் இப்பொழுது பதிலளித்தேன். கொள்கை யளவில் தேவைக்கேற்ப ஜெனரேட்டர்கள் அமைத்துக்கொள்ள மருத்துவ மனைகள் முன்வர வேண்டுமென்று ஏற்கனவே ஆலோசனை வழங்கப் பட்டது. ஆனால், அமைத்துக் கொள்வதென்பது எளிதாக இல்லை. தஞ்சாவூர் மருத்துவ மனையில் ஏற்பட்ட நிகழ்ச்சி வருந்தத்தக்க நிகழ்ச்சி. 1971ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வாங்கிய ஜெனரேட்டரை சரியான முறையில் இயக்குவதற்குத் தேவையான கேபிள் தனியாகப் போட வேண் டியிருக்கிறது. சரியான கேபிள் கிடைக்கவில்லை என்று பொறியிய லாளர் தெரிவித்து, அதனால் தாமதமாகிறது என்று சுட்டிக்காட்டியதற் குப்பின்னர், அந்தக் கம்பெனிக்கு (வோல்டாஸ்) இன்ஜினீருக்கு நேரம் இல்லை என்று சொல்லப்பட்டு, பிறகு இன்ஜினீர் இம்மாதம் 1ந் தேதி வந்து சரிபார்த்த பின்னர்தான் அது இயங்குகிறது. எதையெடுத்தாலும் ஒரு வகையில் தாமதம் இருக்கிறது. அதற்குத் தேவையான கருவிகள் கிடைக்கவில்லை; கருவிகள் கிடைத்ததும் அதை வைக்கத் தனிக் கட்டடம்

கட்ட வேண்டும் என்று சொல்லி, ரூ. 12,500க்கு கட்டடம் கட்டப்பட்டது. இப்படி சில டெக்னிக்கல் பிரச்சனைகள் ஆங்காங்கு ஏற்பட்டுவிடுகின்றன. தேவைக்கேற்ப எந்த எந்த அளவு முடியுமோ அந்தந்த அளவு, உடன டிப் பலன் தரத்தக்க அளவில் பரிசீலிக்கப்படவேண்டும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அதுவும் வாய்மொழியாக. தேவைக்கேற்ப செயல்படுத்தலாம்.

கோடாறங்குளம் மருத்துவ விடுதி.

*வினா 270 : திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகுமக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் உள்ள கோடாறங்குளம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மருத்துவ விடுதி மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) கோடாறங்குளத்திலுள்ள மருத்துவ விடுதி ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. பிரம்மதேசத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ், ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. ஆதலால் அம்பா சமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தின்படி கோடாறங்குளத்தில் இயங்கி வந்த மருத்துவ குழந்தை நல விடுதியை பிரம்ம தேசத்தில் புதிதாகக் கட்டிய கட்டிடத்திற்கு அரசு ஆணையைப் பெற்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கு நல்ல முறையில் நடைபெற்றுவந்த மருத்துவ விடுதி எந்த அடிப்படையில் மாற்றப்பட்டது? மாற்ற வேண்டிய காரணங்கள் என்ன? மாற்றப்பட வேண்டியதற்குத் தகுந்த காரணம் எதும் காட்டாமல் மாற்றியுள்ளதால் அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, கோடாறங்குளத்திற்கே அந்த மருத்துவ விடுதியை மீண்டும் ஆரம்பிக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று கோடாறங்குளத்தில் சப்-சென்டர் நடத்துவதற்கு அரசின் அனுமதியைப் பெறக்கூடிய வாய்ப்பு அந்த ஒன்றியத்தில் இல்லை. மொத்தம் எவ்வளவு சப்-சென்டர்கள் இருக்க வேண்டுமோ அதைவிட ஒன்று அதிகமாக கோடாறங்குளத்தில் வைக்கப்பட்டி ருக்கிறது. அதற்கு மூன்றில் இரண்டு பகுதி அரசாங்க உதவி மானியம் வழங்கக்கூடிய வாய்ப்பு இல்லை, என்று ஆடிட் அப்ஜெக்ஷனில் தெரி விக்கப்பட்டது. அந்த நிலையில் அது இயங்குவதை அங்கே கைவிட்டுவிட்டு,